IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
E.P. 66/2016 in O.S.NO:105/2011

**DEP OF WITNESS:PW2**

| | |
|---|---|
| NAME:Madhankumar | RELIGION:Hindu |
| FATHER NAME:M.Govindaraj | CASTE:SC |
| VILLAGE:Melpatti | OCCUPATION:Town surveyor |
| TALUK:Pernambut | AGE:32 |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 14.09.2022

**முதல் விசாரணை**

1.எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தது. அதற்குண்டான ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். நான் நகர சார் ஆய்வாளர் பொறுப்பு குடியாத்தத்தில பணி புரிகிறேன். சர்வே எண்.741 வார்டு 2 பிளாக் 8, சர்வே எண்.740/2 புல எண்.742 மற்றும் 743/6 அதற்குண்டான எல்ஆர் காப்பி, எப்எம்பி எடுத்துவந்துள்ளேன். எனது ஆவணத்தின்படி சர்வே எண்.741 பரப்பு 92 சதுர மீட்டர் மாணிக்கம் மகன் பச்சையப்பன் பெயரில் தற்போது உள்ளது. சர்வே எண்.740/2 பரப்பு 3 சதுர மீட்டர் மாணிக்கம் மகன் பச்சையப்பன் பெயரில் உள்ளது. சர்வே எண். 742 பரப்பு 63.5 சதுர மீட்டர் மாணிக்கம் மகன் பச்சயைப்பன் பெயரில் உள்ளது.

2.சர்வே எண்.743/6 பரப்பு 24 சதுர மீட்டர் மாணிக்கம் மகன் பச்சயைப்பன் பெயரில் உள்ளது. மேற்சொன்ன சர்வே எண்ணில் உள்ள ஆவணப்படி 26.09.2017 மனு 579/2017 அன்றைய தேதியிலிருந்து மாணிக்கம் மனைவி சாலம்மாள் பெயரிலிருந்து மாணிக்கம் மகன் பச்சையப்பன் பெயரில் மாற்றப்பட்டது. மேற்சொன்ன ஆவணங்களின் எல்ஆர்காப்பி நீ.ம.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன சர்வே எண்களின் புலவரைபடம் நீ.ம.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன ஆவணங்கள் 2001 லிருந்து தற்போது வரை உள்ள விவரங்கள் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1.நான் 2018லிருந்து குடியாத்தம், பொறுப்பு நகர சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பெயர்மாற்றம் செய்த போது எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். பெயர்மாற்றம் இருவகையில் செய்யப்படும் என்றாலும் மூதாதையர் சொத்தில் பெயர் மாற்றம் செய்யும் பொழுது பௌத்தி என்றுஅழைக்கப்படும். பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு மனு கொடுத்தால் அதற்கு எண் வழங்கப்பட்டு பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும் என்றாலும் அந்த எண் தான் மனு எண்.579/2017 என்றால் சரியல்ல அது மனுவின் எண் தான் பிடிஆர் வேறு உள்ளது.

2.2017ம் ஆண்டு நான் அந்த அலுவலகத்தில் வேலை செய்யாததால் எனக்கு முன்

வேலை செய்தவர் பதிவேட்டில் பிடிஆர் எண் மற்றும் உத்தரவு எண்ணை குறிப்பிடாமல் மனுவின் எண் மட்டும் குறிப்பிட்டு பெயர் மாற்றம் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 741ல் 92 சதுர மீட்டர் என்று எங்கள் ஆவணங்களில் காட்டப்படடள்ளது மனுதாரர் சம்மனில் 2 செக்பந்திகளாக காட்டப்பட்டுள்ளது என்றாலும் 2 அளவுகளும் எவ்வளவு என்று என்னால் கணக்கிட்டு தான் சொல்லமுடியும் என்றால் சரிதான்.

3.பட்டா மாற்றம் செய்ய மனுவின் அடிப்படையில் தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவின் விவரங்கள் எங்கள் அலவலகத்தில் இருக்குமா என்றால் அது உதவி இயக்குனர் நிலஅளவை பதிவேடி வேலூர் அலுவலகத்தில் தான் இருக்கும். எங்களுக்கு உத்தரவு கிடைததபின்பு தான் பட்டா பெயர் மாற்றம் செய்வோம் என்றால் சரிதான். உத்தரவு நகல் எங்கள் அலவலகத்தில் இருக்குமா என்றால் அதுபோன்று எந்த உத்தரவு நகலும் எங்கள் அலவலத்தில் இருக்காது அனைத்து கோப்புகளையும் நாங்கள் பட்டா மாற்றம் செய்த பிறகு நில அளவையர் பதிவேடு அலுவகத்திற்கு அனுப்பிவிடுவோம்.

4.நான் பட்டா மாற்றம் செய்யும் காலத்தில் பணியில் இல்லாததால் அந்த உத்தரவு நகல்கள் மற்றும் கோப்புகள் பார்த்தால் தான் எதற்காக பட்டா மாற்றம் செய்யப்பட்ட விவரம் தெரியவரும் என்றால் சரிதான். டவுன் சர்வேயர் ரிஜிஸ்ர் படி பட்டாமாற்றத்திற்கான விவரங்கள் தெரு பெயர் இருக்காது என்றால் சரிதான் ஆனால் கதவு இலக்க எண் இருக்கும். எங்கள் ஆவணங்களின் அடிப்படையில் சர்வே எண்.740/2ற்கு கதவு எண் 6 என்றும் 742க்கு கதவு எண்.6 என்றும் சர்வே எண்.743/6க்கு கதவு எண்6எ என்றும் சர்வே எண்.741க்கு தகவு எண் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2017ம் ஆண்டு நான் அந்த அலுவலகத்தில் வேலை செய்யாததால் எனக்கு முன் வேலை செய்தவர் பதிவேட்டில் பிடிஆர் எண் மற்றும் உத்தரவு எண்ணை குறிப்பிடாமல் மனுவின் எண் மட்டும் குறிப்பிட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டதால் அந்த மனு எதற்காக கொடுக்கபபட்டது எப்படி மாற்றப்பட்டது என்ற உண்மை தன்மை நம்புவதற்கு இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF